# 54வது உலகத் தொடர்பு நாள் ஞாயிறு

(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

அனுமதி

மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,
தலைவர், தமிழக ஆயர் பேரவையின்
திருவழிபாட்டுப் பணிக்குழு

தயாரிப்பு

அருள்பணி. அ. டேவிட் ஆரோக்கியம்,
செயலர், தமிழக ஆயர் பேரவையின்
சமூக ஊடகப் பணிக்குழு,

தயாரிப்பில் உதவி

அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்
பொதுச் செயலர்
தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு
முப்பணி மையம், திண்டிவனம்
2020

# வாழ்த்துரை

## கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே!

உலகமே கொரோனா தொற்றுநோயின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளையில் நமது கத்தோலிக்க ஆலயங்கள் மூடப்பட்டு, அருளடையாளக் கொண்டாட்டங்களில் பங்கெடுக்க முடியாமல் உளம் நொந்து உறவுகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்தவர்களாய், கடவுளோடும் நாம் வாழும் இறைச் சமூகத்தோடும் தொடர்பு கொள்ள இயலாமல் இல்லங்களில் அடைபட்டு முடங்கிப்போனவர்களாய், இறைவன் மட்டுமே நம் எல்லோருக்கும் நிறை அமைதி தருவார் என்று எதிர்நோக்கி, இறைவன் இயல்பான காலத்தை விரைவில் அருள ஒவ்வொரு நாளும் வேண்டுதல் செய்து நம்பிக்கையுடன் காத்துக்கொண்டிருக்கின்றோம்.

இப்படிப்பட்ட இயல்புக்கு மாறான சூழலில், நமது தமிழக ஆயர் பேரவையின் திருவழிபாட்டுப் பணிக்குழுவும் நம்வாழ்வு இதழும் வாரந்தோறும் ஞாயிறு திருவழிபாட்டுக் குறிப்பேட்டைத் தயார் செய்து, இறைமக்கள் இல்லத்திலிருந்து குடும்பமாக ஒன்றிணைந்து ஒன்றுபட்ட உள்ளத்தோடு இறைவனிடம் வேண்டுதல் செய்து, இறைநம்பிக்கையில் ஆழப்படுவதற்கு உதவியாக, தகுந்த செயல்பாட்டை முன்னெடுத்து வருவதை நினைத்து நான் மகிழ்ந்து வாழ்த்துகிறேன். இம்முயற்சிக்கு தமிழக திரு அவை முழுவதும் முழுமையான ஒத்துழைப்பை நல்கும் விதமாக, இந்த ஞாயிறு திருவழிபாட்டுக் குறிப்பேட்டை அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகள், அருள்சகோதரர்கள், இளைஞர் மற்றும் இறைமக்கள் அனைவரும் சமூக ஊடகங்கள் வாயிலாக அனைவருக்கும் அனுப்பி பரப்புரைச் செய்து இல்லங்களில் இறையரசைக் கட்டியெழுப்பும் முயற்சியில் துணைநிற்க வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இச்சூழலில் நமது திருத்தந்தை அவர்கள் 54–வது உலகத் தொடர்பு நாளை இவ்வருடம் ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழாவன்று "நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்" (விப 10:2) என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் 'வாழ்வே வரலாறு' என்ற மையப் பொருளில் கொண்டாட அழைப்பு விடுத்திருந்தார். அதாவது கதைச் சொல்லுங்கள் என்ற பொருளில், நாம் நமது வாழ்வுக்கான தொடர்புக் கூறுகளை இழந்து விடாமலிருக்க, நமது வாழ்வின் வேர்களை நாம் கண்டுகொள்ள, நம் வாழ்வை உண்மையில், இறைநம்பிக்கையில்,

மனிதநேயத்தில் கட்டியெழுப்பும் கதைகளை நமக்கு அடுத்து வரும் தலைமுறைக்கு எடுத்துச்செல்லுங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆகவே நமது தமிழக ஆயர் பேரவையின் சமூக ஊடகப் பணிக்குழு இவ்வருடம் 54வது உலகத் தொடர்பு நாளை நமது காலச்சூழலுக்கேற்ப, ஆகஸ்ட் 23–ஆம் நாள் முதல் ஆகஸ்ட் 30–ஆம் நாள் வரை ஒரு வாரமாகக் கொண்டாடத் திட்டமிட்டது. அதன்படி, திருத்தந்தை அவர்கள் எழுதிய சுற்றுமடலை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துணைப்பொருளில் திருப்பலி, நற்கருணை ஆராதனை, செபமாலை மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை தமிழக மறைமாவட்ட சமூக ஊடகப் பணிக்குழுக்கள் இணைந்து தயாரிப்பு செய்து, நமது மாதா தொலைக்காட்சி வழியாக ஒளிபரப்புச் செய்து இவ்வருடம் 54–வது உலகத் தொடர்பு நாளை அர்த்தமுள்ளதாக கொண்டாடி வருகின்றது. அதன் முத்தாய்ப்பாக, நமது தமிழக ஆயர் பேரவையின் சமூக ஊடகப் பணிக்குழு ஆகஸ்ட் 30–ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று 54–வது உலகத் தொடர்பு நாளாகக் கொண்டாட மாபெரும் அழைப்பு விடுத்திருக்கின்றது.

எனவே, நம் ஆண்டவர் நமது வாழ்வில் குறுக்கீடு செய்த நிகழ்வுகளை, நமது அடுத்த தலைமுறைக்கு நம்பிக்கையூட்டும் கதைகளாக எடுத்துச் சொல்லி, நமது கத்தோலிக்கத் தலைமுறையை வேரூன்றச் செய்வோம். இறைத் துணையோடு நல் கத்தோலிக்க கலாச்சாரத்தை கட்டியெழுப்புவோம். நம் ஆண்டவர் இயேசு உங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து உங்கள் உள்ளங்களை தூண்டியெழுப்பி வழிநடத்துவாராக!

**உங்கள் அனைவருக்கும் இறைஆசீர்!**

**✠ மேதகு ஆயர் சிங்கராயன்**
*தலைவர், தமிழக ஆயர் பேரவையின்*
*சமூக ஊடகப் பணிக்குழு*

# அணிந்துரை

இறைமகன் இயேசுவில் அன்பிற்கினியவர்களே!

கத்தோலிக்கத் திரு அவையின் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் திருத்தந்தை 6-ஆம் சின்னப்பர் அவர்களால், டிசம்பர் 4, 1963-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘‘இந்தெர்மிரிபிக்கா’’ என்ற திருமறைக் கோட்பாட்டின் 18-ஆம் பத்தி இவ்வாறு சொல்கிறது: ‘திரு அவையின் பல்வேறு மறைப்போதகப்பணிகள் சமூக தகவல் தொடர்பு ஊடகங்களின் வழியாக திறம்படச் செயல்படுத்தப்பட வேண்டும்.’ எனவே, ஒவ்வொரு ஆண்டும் உலகில் உள்ள எல்லா மறைமாவட்டங்களிலும் அதன் ஆயர்களின் உறுதியான வழிகாட்டுதலில் உலகத் தொடர்பு நாள் கொண்டாடப்பட வேண்டும். இந்நாளில் திரு அவையின் நம்பிக்கையாளர்களுக்கு உலகத் தொடர்பு நாளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அதற்காக செபிக்கவும், பொருளாதார பங்களிப்பு செய்வதன் அவசியத்தையும் உணர்த்த வேண்டும்.

இதன் அடிப்படையில் இந்த ஆண்டு நம் பாசமிகு திருத்தந்தை அவர்கள் ‘‘வாழ்வே வரலாறு’’ என்ற மையப்பொருளில் விடுதலைப் பயண நூல் 10:2-ல் உங்கள் மத்தியில் ‘நான் ஆற்றிய அரும்செயல்களை உங்களின் சந்ததிகளுக்கு விவரித்துச் சொல்லுங்கள்’ என்று யாவே கடவுள் இஸ்ரயேல் மக்களிடம் சொன்னது போன்று, நாமும் நம் குடும்பங்களில், சமுதாயத்தில் நமது வாழ்க்கை அனுபவங்களை, இறையரசின் மதிப்பீடுகளை மற்றும் நம்பிக்கை வாழ்க்கையைக் குறித்த நிகழ்வுகளையும், கதைகளையும் மூத்த சந்ததியினர் அடுத்துவரும் தலைமுறையினரோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

**இறைமகன் இயேசுவில் அன்புடன்,**

**அருள்பணி. அ. டேவிட் ஆரோக்கியம்**
***செயலர், தமிழக ஆயர் பேரவையின்***
***சமூக ஊடகப் பணிக்குழு***

# 54வது உலகத் தொடர்பு நாள்

**(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)**

**மையக்கருத்து : வாழ்வே வரலாறு**

**"நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்." (விப 10:2)**

## முன்னுரை

கிறிஸ்துவில் அன்பிற்கினியவர்களே! 54வது உலகத் தொடர்பு நாள் சிறப்பு வழிபாட்டுக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வாழ்வே வரலாறு என்ற மையக்கருத்தில் "நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்" (விப 10:2) என்ற இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு, உலகத் தொடர்பு நாளைக் கொண்டாட நம்மை அழைக்கிறார். உலகம் முழுவதும் கொரோனா தொற்று நோயினால் முடங்கியிருக்கும் இக்காலத்தில், கிறிஸ்துவின் நற்செய்தியை ஊடகங்கள் வழியாக அறிவிக்க, நமக்குள்ள கடமையைப் பற்றி சிந்திக்கவும் செயல்படவும் நம்மை அழைக்கிறார். எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்தபோது எவ்வாறு யாவே கடவுள் செயல்பட்டார் என்னும் விடுதலை அனுபவத்தை, ஒவ்வொரு இஸ்ரயேலரும் தனது பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் தவறாமல் விவரித்துச் சொல்ல வேண்டும் என்று கடவுளாலேயே அறிவுறுத்தப்பட்டார்கள் என்பதை விடுதலைப் பயணம் 10:2–ல் காண்கிறோம். இதையே நம் திருத்தந்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

நாம் நமது வாழ்வில் நம்மைப் பிண்ணிப் பிணைந்துள்ள தன்னை விளம்பரப்படுத்தும் வீணான பிதற்றல், பிறரது வாழ்வைச் சீரழிக்கும் வதந்திகள், நமது அறிவை மழுங்கடிக்கும் கதைகள், கலாச்சாரத்தை, மனித மாண்பை சீரழிக்கும் தீய, பயனற்ற கதைகள், அடக்குமுறைகளை ஊக்குவிக்கும் கதைகள், சமூக ஊடகங்களில் உலாவரும் பொய்யான மற்றும் அதிநவீனம் என்ற பெயரில் மக்களை மயக்கும் தரவுகள் போன்ற கதைகளை இனம் கண்டு துணிவுள்ள மனதுடன் புறக்கணிக்க வேண்டும். அதற்குப் பதிலாக நமது வாழ்வின் வேர்களை நாம் கண்டுகொள்ள உதவும் கதைகள், நம்மைச் சுற்றியுள்ள அழகை வருணிக்கும் கதைகள், இன்றைய உலகையும் அதன் நிகழ்வுகளையும் நமது பண்பாடு கூறுகளை மனித நேயத்துடன் விவரிக்கும் கதைகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, முதன்மைப்படுத்த

வேண்டும். எனவே, நாம் சொல்லும் கதைகள் நம்மை விளம்பரப்படுத்த அல்ல, மாறாக கடவுள் பார்வையில் நான் யார்? கடவுள் என் வாழ்வில் எவ்வாறு செயலாற்றி என்னை வழிநடத்துகிறார் என்னும் நமது இறைநம்பிக்கை மற்றும் இறையனுபவக் கதைகளை இக்கால மாந்தருக்கும் நமது அடுத்தத் தலைமுறையினருக்கும் நம் வாழ்வைக் கட்டியெழுப்பும் வரலாறாக நமது வாழ்வியல் கதைகளை விவரித்துச் சொல்ல நமது திருத்தந்தை அறிவுறுத்துகிறார்.

கொரோனா தொற்று நோயினால் இல்லங்களில் முடங்கிப்போயிருக்கும் இக்காலக் கட்டத்தில், நமது திருத்தந்தை கூறியபடி அமைதியின் கதைகளை, நமது எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் உண்மை, நம்பிக்கையின் கதைகளைக் கண்டுணர்ந்து ஊடக வழியாக அவற்றை அறிவிக்க நன்மனதையும் இறையருளையும் ஆண்டவர் நமக்கு அருள, இந்த வழிபாட்டில் ஒரே குடும்பமாக இணைந்து வேண்டுவோம்.

### வருகைப் பல்லவி

"நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்" (விப 10:2).

(அல்லது)

### வருகைப்பாடல்

இறைவன் நம்மை அழைக்கின்றாரே விரைந்து வாருங்கள்
புதிய உலகம் படைத்திடவே மகிழ்ந்து கூடுங்கள்
இறைவன் அரசு வளர்ந்திடவே இறைவார்த்தை வழங்கிடவே (2)
இனிதே இணைந்தே சென்றிடுவோம்

1. தாயின் கருவினிலே நம்மைத் தெரிந்தெடுத்தார்
அவரின் கைகளிலே நம் பெயரைப் பொறித்து வைத்தார் (2)
அவரில் நம்மை அர்ப்பணம் செய்ய
மனித மாண்பு மண்ணில் உயர (2)
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

2. அன்புப் பணியினிலே இறைவனின் சொல்லிலே
ஏழை மனிதரிலே இயேசுவைக் காணவே (2)
உண்மை நீதி நேர்மை நிலைக்க
பொய்மை சாதி வன்மை அழிக்க (2)
எழுவீர் வருவீர் இயேசு வழியிலே

வழிபாட்டுத் தலைவர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

## மனத்துயர் மன்றாட்டு

ஒரு இல்லவாசியின் மீது குற்றம் சாட்டப்படும்போது வெளியுலகை பொறுத்தவரை அவரது வாழ்க்கை முடிந்துவிட்டது. ஆனால் இயேசுவைப் பொறுத்தமட்டில் அப்படியல்ல. நம்மை தமது தேவைக்கு பயன் படுத்தியவரையும், பகைவரையும் மன்னித்து அவர்களுக்கு நல்லது செய்ய; குற்றம் புரிந்த, பிறர்வாழ்வை கெடுத்த, திருடிய, சமுதாயத்தை சீரழித்தவர்களுக்கு இருப்பிடம், உணவு, உடை கொடுக்க, புதுப்பிக்கப்பட்ட மனநிலை தேவை. சாதாரண மனநிலை தவறு செய்தவர்களுக்கு தண்டனை சரிதான் என்று சொல்லும். ஆனால் ஆன்மீக மனநிலை, குற்றவாளியின் வேதனை, எதிர்மறை எண்ணங்களை மனதில் கொண்டு மீட்பை வழங்குகிறது. இவ்வேளையில் நம் தலைவராகிய இயேசுவின் மனநிலை நம்மில் இருக்கிறதா என சிந்திப்போம். நாம் செய்த எல்லா பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம்.

வழிபாட்டுத் தலைவர் : எல்லாம் வல்ல இறைவனிடமும். . .

எல் : சகோதரர், சகோதரிகளே உங்களிடமும். . .

வழிபாட்டுத் தலைவர் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

வழிபாட்டுத் தலைவர் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

எல் : கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

வழிபாட்டுத் தலைவர் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல் : ஆண்டவரே இரக்கமாயிரும்.

(அல்லது)

(சிறிது நேரம் அமைதியாக ஆன்ம சோதனை செய்தல்; பின்னர், மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடுதல்; ஒவ்வொரு பாவ அறிக்கைக்குப் பிறகும் 'உம் இரத்தத்தால் எம்மைக் கழுவும்' என்று பாடவும்).

(அல்லது)

ஏதேனும் ஒரு மனத்துயர் பஜன் பாடல் பாடலாம்.

வழிபாட்டுத் தலைவர் : உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.

எல் : உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக. . .

உம்மைப் புகழ்கின்றோம்.

உம்மை வாழ்த்துகின்றோம்.

உம்மை ஆராதிக்கின்றோம்.

உம்மை மாட்சிப்படுத்துகின்றோம்.

உமது மேலான மாட்சியின் பொருட்டு

உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே,

எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா,

ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே,

இயேசு கிறிஸ்துவே,

ஆண்டவராகிய இறைவா,

இறைவனின் செம்மறியே, தந்தையின் திருமகனே,

உலகின் பாவங்களைப் போக்குபவரே,

*எங்கள்மேல் இரக்கமாயிரும்.*

உலகின் பாவங்களைப் போக்குபவரே,

*எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்.*

தந்தையின் வலப் பக்கம் வீற்றிருப்பவரே,

*எங்கள்மேல் இரக்கமாயிரும்.*

ஏனெனில் இயேசு கிறிஸ்துவே,

நீர் ஒருவரே தூயவர். நீர் ஒருவரே ஆண்டவர்.

நீர் ஒருவரே உன்னதர்.

தூய ஆவியாரோடு, தந்தையாகிய இறைவனின்

மாட்சியில் இருப்பவர் நீரே. ஆமென்.

## திருக்குழும மன்றாட்டு

வழிபாட்டுத் தலைவர் :

ஆற்றல் வாய்ந்த இறைவா, சிறந்தவை அனைத்தும் நிறைந்தவரே, உம்மீது நாங்கள் உள்ளார்ந்த அன்புகொள்ளச் செய்தருளும். அதனால், எங்களது சமயப்பற்றை வளர்த்து, நன்மைகளைப் பெருகச் செய்து நீர் எங்களில் கருத்துடன் உருவாக்கியதைப் பராமரித்துக் காத்தருள்வீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம் / எங்கள் ஆண்டவரே, கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## முதல் வாசகம் : எரே 20 : 7-9

*கடவுளின் வார்த்தையைப் பிறருக்குச் சொல்வது எளிதானதல்ல. மாறாக அது சவால்கள் மிகுந்தது. எனினும் இறைச்செய்தியை எடுத்துரைக்காமல் இருக்க முடியாது. இத்தகைய தனது அனுபவத்தை இறைவாக்கினர் எரேமியா இவ்வாசகத்தில் நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். திறந்த மனதுடன் கேட்போம்.*

**ஆண்டவரின் வாக்கு என்னை பழிச்சொல்லுக்கும் நகைப்புக்கும் ஆளாக்கியது**

**இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம் 20 : 7–9**

ஆண்டவரே! நீர் என்னை ஏமாற்றிவிட்டீர்; நானும் ஏமாந்து போனேன்; நீர் என்னைவிட வல்லமையுடையவர்; என்மேல் வெற்றி கொண்டுவிட்டீர்; நான் நாள் முழுவதும் நகைப்புக்கு ஆளானேன். எல்லாரும் என்னை ஏளனம் செய்கின்றார்கள். நான் பேசும்போதெல்லாம் 'வன்முறை அழிவு' என்றே கத்த வேண்டியுள்ளது; ஆண்டவரின் வாக்கு என்னை நாள் முழுதும் பழிச்சொல்லுக்கும் நகைப்புக்கும் ஆளாக்கியது.

"அவர் பெயரைச் சொல்ல மாட்டேன்; அவர் பெயரால் இனிப் பேசவும் மாட்டேன்" என்பேனாகில், உம் சொல் என் இதயத்தில் பற்றியெரியும் தீ போல இருக்கின்றது. அது என் எலும்புகளுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றது. அதனை அடக்கிவைத்துச் சோர்ந்து போனேன்; இனி என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

**ஆண்டவரின் அருள்வாக்கு.**

**பதிலுரைப் பாடல்** **திபா 63:1. 2-3. 4-5. 7-8. (பல்லவி : 1b)**

**பல்லவி :** கடவுளே! என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது

1 கடவுளே! நீரே என் இறைவன்! உம்மையே நான் நாடுகின்றேன்; என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது; நீரின்றி வறண்ட தரிசு நிலம் போல என் உடல் உமக்காக ஏங்குகின்றது. **பல்லவி**

2 உம் ஆற்றலையும் மாட்சியையும் காண விழைந்து உம் தூயகம் வந்து உம்மை நோக்குகின்றேன்.

3 ஏனெனில், உமது பேரன்பு உயிரினும் மேலானது; என் இதழ்கள் உம்மைப் புகழ்கின்றன. **பல்லவி**

4 என் வாழ்க்கை முழுவதும் இவ்வண்ணமே உம்மைப் போற்றுவேன்; கைகூப்பி உமது பெயரை ஏத்துவேன்.

5 அறுசுவை விருந்தில் நிறைவடைவது போல என் உயிர் நிறைவடையும்; என் வாய் மகிழ்ச்சிமிகு இதழ்களால் உம்மைப் போற்றும். **பல்லவி**

7 ஏனெனில், நீர் எனக்குத் துணையாய் இருந்தீர்; உம் இறக்கைகளின் நிழலில் மகிழ்ந்து பாடுகின்றேன்.

8 நான் உம்மை உறுதியாகப் பற்றிக்கொண்டேன்; உமது வலக்கை என்னை இறுகப் பிடித்துள்ளது. **பல்லவி**

## இரண்டாம் வாசகம் : உரோ 12 : 1-2

*இறைவார்த்தையை நாம் வாசிப்பதும் கேட்பதும் இறைவனின் திருவுளத்தை அறிந்துகொள்வதற்காகவே. இதில் வெற்றி கண்டு உலகம் விரும்பும் செய்திகளைச் சொல்பவர்களாய் இல்லாமல், கடவுள் விரும்பும் விதத்தில் நாம் நற்செய்திப் பணியாற்ற ஒரே வழி உலகத்தின் போக்கின்படி ஒழுகாதிருத்தலே என்று உறுதியாகக் கூறும் பவுலடியாரின் சொற்களுக்குச் செவிமடுப்போம்.*

**தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்**

**திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்**
***12 : 1-2***

சகோதரர் சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன்: கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு.

இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.**

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி** **எபே 1: 18 காண்க**

அல்லேலூயா, அல்லேலூயா! கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக! அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்** **மத் 16 : 21-27**

*இயேசு கிறிஸ்து அறிவிக்கும் நற்செய்தி இவ்வுலகில் துன்பங்கள் இல்லாத சுகபோக வாழ்வை உறுதியளிக்கும் போலியான செய்தியன்று. தன்னலத்திற்கு மரித்து சிலுவையைச் சுமந்து, கிறிஸ்துவைப் பின்செல்வதே நிலைவாழ்வுக்கான வழி. இதற்கு மாறான எதுவும் கிறிஸ்து வழங்கும் செய்திக்கு எதிரானது என்று கூறும் நற்செய்திக்கு செவிமடுப்போம்.*

**என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, என்னைப் பின்பற்றட்டும்**

✠ **மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்** *16 : 21–27*

அக்காலத்தில், இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார்.

பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்து கொண்டு, “ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது” என்றார். ஆனால் இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்து, “என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவைபற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்” என்றார்.

பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக, என் பொருட்டுத் தம்மையே அழித்துக்

கொள்கிற எவரும் வாழ்வடைவார். மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?

மானிட மகன் தம் தந்தையின் மாட்சியோடு தம் வானதூதர்களுடன் வரப் போகிறார்; அப்பொழுது ஒவ்வொருவருக்கும் அவரவர் செயலுக்கேற்பக் கைம்மாறு அளிப்பார்'' என்றார்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.**

## மறையுரைச் சிந்தனைகள்

### மையக்கருத்து : உங்கள் வாழ்வின் கதை சொல்லுங்கள்

### சொல்லுதல் அவசியம், சொல்லாமல் இருக்க முடியாது

உலகத்தொடக்க முதல் "உண்டாகட்டும்'' என்று சொல்லால் செயல்பட்ட கடவுள் பேசும் கடவுளாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். "ஆதாம் எங்கே இருக்கிறாய்?'' என்ற அவரது குரல் உலகில் மனிதர் மற்றும் படைப்புகள் வழியாக இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவர் பெயரால் பேசவும் அவரது செய்தியை உலகினருக்கு அறிவிக்கவும் அவர் தொடர்ந்து மனிதரை அனுப்புகிறார். இத்தகைய ஒரு நிகழ்வையே இன்றைய முதல் வாசகத்தில் (எரே 20:7–9) காண்கிறோம். கடவுள் தரும்செய்தியை பிறருக்கு அறிவிப்பது அவ்வளவு எளிதல்ல. மாறாக அது கடினமானதும் ஆபத்தானதும் ஆகும். இஸ்ரயேல் மக்கள் மனம் திரும்ப வேண்டும். இல்லையேல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுவார்கள் என்ற மக்கள் கேட்க விரும்பாத செய்தியை எரேமியா அறிவிக்கும்படி அனுப்பப்பட்டார். இதன் ஆபத்தான விளைவை உணர்ந்த எரேமியா "அவர் பெயரால் இனி பேசமாட்டேன்'' என்று முடிவெடுக்கிறார் (வச. 9). ஆனால் ஆண்டவரின் வார்த்தை எரேமியாவின் இதயத்தில் தீயைப்போல பற்றி எரிந்தது. தன் எலும்புகளுக்குள் அடைப்பட்டிருக்கும் கடவுளின் செய்தியை அவரால் அதை அடக்கி, அணைத்துவிட முடியவில்லை. கடவுள் இன்று தரும் செய்தியை நம் சொல்லாலும் செயலாலும் மாதா தொலைக்காட்சி, வேரித்தாஸ் வானொலி மற்றும் நம்வாழ்வு இதழ் போன்ற வெகுஜன மற்றும் சமூக ஊடகங்கள் வழியாகவும் நாம் அறிவிப்பது நமது கடமை.

### கதை சொல்லும் கிறிஸ்து

இயேசு தான் மனிதனாகப் பிறந்தது முதல் தன் சொல்லாலும் வாழ்க்கைப் பாணியாலும் இறைவனின் திட்டத்தை மனிதருக்கு

அறிவிப்பதையே தலையாயப் பணியாகக் கொண்டிருந்தார். அவரது போதனைகள், புதுமைகள், பயணங்கள், செயல்கள், யூதர்களின் தலைவர்களோடு அவர் மேற்கொண்ட போராட்டங்கள், இறுதியாக அவரது பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகிய அனைத்தாலும் கடவுளைப் பற்றியும் அவரது திருமகனாகியத் தன்னைப் பற்றியும் தன் வழியாக நிறைவேறும் இறைத்திட்டத்தைப் பற்றியும் அதனால் நம்பிக்கையாளர் பெறும் நிலைவாழ்வு பற்றியும் யூதருக்கும் யூதர் அல்லாதவருக்கும் விவரித்துச் சொன்னார். தனது நற்செய்தியை அறிவிப்பதற்கல்லாமல் வேறு எதற்கும் அவர் தனது நேரத்தையும் ஆற்றலையும் செலவிடவில்லை. இதைத்தான், திருத்தந்தை பிரான்சிஸ் கதை சொல்லும் இயேசு என்று குறிப்பிடுகிறார். இயேசு கூறியது கட்டுக் கதைகளோ, புராணக்கதைகளோ அல்ல. மாறாக அவர் கூறியதெல்லாம் கடவுள் – கிறிஸ்து – மனிதரிடையேயான உறவின் உரையாடல்களும் செய்திகளும் நிகழ்வுகளுமே. இது இயேசுவின் வாழ்வின் கதை – வரலாறான கதை – மனிதருக்கு இம்மையிலும் மறுமையிலும் வாழ்வளிக்கும் கதை. நல்ல கதை – நன்மை பயக்கும் கதை – மனிதருக்கு மீட்பளிக்கும் கதை.

### கதை சொல்ல அழைக்கும் கிறிஸ்து

வாழ்வுக்கான கதை சொன்ன கிறிஸ்து, தம் சீடர்களுக்குக் கொடுத்த முக்கியக் கட்டளை “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மாற் 16:16) என்பதேயாகும். “இதோ நான் உலக முடிவு வரை எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்” (மத் 28:20). இயேசுவின் சீடராக இருக்கும் ஒவ்வொருவரும் தங்களின் கிறிஸ்தவ வாழ்வின் அனுபவக் கதைகளை தம் “மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்ல” (விப 10:2) கடமைப்பட்டுள்ளோம் என்பதைத் திருத்தந்தை இன்று உலகத்தொடர்பு நாளில் நமக்கு நினைவுபடுத்துகின்றார். இதனை இன்று ஊடகங்கள் வழியாக செய்வது எப்படி என்பதே நமது சிந்தனை. இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் “நற்செய்தியை அறிவிப்பதே திரு அவையின் தலையாயக் கடமை.” இந்த நோக்கத்திற்காகவே திரு அவையின், ஊடகங்கள் உள்பட, அனைத்து வளங்களையும் பயன்படுத்த வேண்டும் என்றுரைக்கிறது. எனவே கதை சொல்வோம் வாருங்கள்!

### வாழ்வின் கதைகளைச் சொன்னவர்கள் புனிதர்கள்

“கிறிஸ்துவின் கதை ஒரு பழங்காலக் கதையல்ல. கடவுள் நம் வாழ்விலும் வரலாற்றிலும் பங்கு பெற்றுச் செயலாற்றும் கதை. கடவுளே

நம்முடன் இணைந்து செயல்படுவதால் ஒவ்வொரு மனித கதையும் ஒரு தெய்வீகக் கதையாகிறது. ஒவ்வொரு மனிதனின் கதையிலும் கடவுள் உலகிற்கு வந்த தம் மகனின் கதையை மீண்டும் காண்கிறார்'' என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். கடவுள் தங்கள் வாழ்வில் வல்லமையுடன் செயல்பட்டதை உணர்ந்து அனுபவித்த புனிதர்கள் தங்கள் வாழ்க்கைக் கதைகளை செபங்கள், கவிதைகள், பாடல்கள், தியானங்கள், போதனைகள், கடிதங்கள், சுயவரலாறு போன்றவற்றால் பிறருக்கு ''விவரித்துச் சொன்னார்கள்'' (விப 10:2) எடுத்துக்காட்டாக புனித குழந்தை தெரேசாவின் ''ஓர் ஆன்மாவின் கதை'', புனித அகுஸ்தீனாரின் ''கன்பெசன்ஸ்'' என்னும் சுய சரிதை, புனித இஞ்ஞாசியாரின் ''திருப்பயணியின் பயணம்'' என்ற கதை இன்னும் பல. வாருங்கள்! ஊடகங்கள் (பேச்சு, எழுத்து, ஒலி–ஒளிக் கருவிகள், தொலைக்காட்சி, இணையதளம், சமூக ஊடகங்கள்...) வழியாக உங்கள் நம்பிக்கை வாழ்வின் கதை சொல்ல வாருங்கள்!!

### உங்கள் கதைகளைச் சொல்ல வாருங்கள்!

''நமது கதையைச் சொல்வது நம்மையே விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. மாறாக கடவுள் பார்வையில் நாம் யார் என்பதையும் தூய ஆவியார் நம் வாழ்க்கைக் கதையில் என்ன எழுதுகிறார் என்பதை எடுத்துரைக்கவும் ஒவ்வொருவரின் கதையிலும் மறைந்திருக்கும் அற்புதமான கடவுளின் செயல்பாடுகளை வெளிக்கொணரவுமே'' எனத் திருத்தந்தை இந்நாளுக்கான செய்தியில் வலியுறுத்துகிறார். நாம் சொல்ல அழைக்கப்படும் நம் கதைகள் (நற்செய்தி) நாம் படித்ததும் அறிந்ததும் மட்டுமல்ல மாறாக நாம் ''கண்களால் கண்டதை, காதால் கேட்டதை, உற்று நோக்கியதை, கைகளால் தொட்டு உணர்ந்ததை, நம் வாழ்வில் நாம் அனுபவித்ததை, நமக்கு வெளிப் படுத்தப்பட்ட வாழ்வை...'' (1 யோவா 1:1–2) நாம் பிறருக்கு கதையாகச் சொல்ல அழைக்கப்படுகிறோம். இதையே முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் நம்பிக்கை ஆண்டுக்கான திருமுகத்தில் ''புத்தகத்திலிருந்து அல்ல மாறாக உன் உள்ளத்தில் இருக்கும் இயேசுவை அறிவிப்பதே நம்பிக்கை அறிக்கை'' என்றார்.

### கதை சொல்லத் தடை என்ன?

இன்று நாம் நற்செய்தியில் இயேசு பாடுகள் படப்போவதைப்பற்றி பேதுருவுக்கும் இயேசுவுக்கும் இடையே நடந்த உரையாடலைக் கேட்டோம். இயேசு பாடுகள் படக்கூடாது என்கிறார் பேதுரு. மனுமகன் பாடுகள் பட வேண்டும் என்கிறார் இயேசு. இறுதியில் ''சாத்தானே'' என்ற பட்டத்தைப்

பெறுகிறார் பேதுரு. காரணம் என்ன? பேதுரு "கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறார்." இதனாலேயே பொய்யான செய்திகளும் போலியான செய்திகளும் உருவாக்கிப் பரப்பப்படுகின்றன. இதையே பொய்யான, போலியான, தீய கதைகள் என்று ஊடகங்களைக் கையாள்வோருக்கு நம் திருத்தந்தை கூறுகிறார். இதைக் களையவே பவுலடியார் இன்றைய இரண்டாம் வாசகத்தில் "உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள்... அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்துத் தெளிவீர்கள்" என்கிறார். நம் நம்பிக்கை வாழ்வின் கதைகளைச் சொல்ல நம் "உள்ளம் புதுப்பிக்கப்பட்டு மாற்றம் அடைய வேண்டும்" (உரோ 12:1–2). எனவே நல்ல கதை சொல்வோம் வாருங்கள்!!

இன்றையத் திருவழிபாட்டில் ஊடகங்கள் வழியாக நற்செய்தி அறிவிக்கும் அனைவரும் பொய்யான கதைகளை விடுத்து, கடவுள் விரும்பும் நம் வாழ்வின் நல்ல கதைகளைச் சொல்பவர்களாகத் திகழ வேண்டுவோம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு அன்னை மரியா. அவர் கடவுள் தம் வாழ்வில் செய்த அனைத்தையும் கதையாக தனது பாடலில் விவரித்துச் சொல்கிறார். "அவர் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" (லூக் 1:46–55). நாமும் நம் வாழ்க்கைக் கதைகளைச் சொல்வோம் வாருங்கள்!!

## நம்பிக்கை அறிக்கை

எல் : ஒரே கடவுளை நம்புகின்றேன். . .

விண்ணகமும் மண்ணகமும், காண்பவை காணாதவை யாவும் படைத்த
எல்லாம் வல்ல தந்தை அவரே.
கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஒரே ஆண்டவர்
இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.
இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார்.
கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக,
உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர்.
இவர் உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர்.
தந்தையோடு ஒரே பொருளானவர்.
இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.
மனிதர் நமக்காகவும் நம் மீட்புக்காகவும்

விண்ணகம் இருந்து இறங்கினார்.

(“. . . மனிதர் ஆனார்” எனச் சொல்லும்வரை எல்லாரும் தலை வணங்கவும்).

தூய ஆவியால் கன்னி மரியாவிடம்

உடல் எடுத்து மனிதர் ஆனார்.

மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில்

சிலுவையில் அறையப்பட்டுப்

பாடுபட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார்.

மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

விண்ணகத்துக்கு எழுந்தருளி,

எல்லாம் வல்ல தந்தையின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றார்.

வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட

மாட்சியுடன் மீண்டும் வர இருக்கின்றார்.

அவரது ஆட்சிக்கு முடிவு இராது.

தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும்

ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகின்றேன்.

இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக

ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்.

இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.

ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும்

திரு அவையை நம்புகின்றேன்.

பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன்.

இறந்தோரின் உயிர்ப்பையும்

வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

## இறைமக்களின் மன்றாட்டு

**அ.பணி. :** அன்பிற்கினிய சகோதர சகோதரிகளே! கடவுள் மக்கள் வாழ்வில் குறுக்கீடு செய்து தமது அன்பையும் ஆறுதலையும் வெளிப்படுத்தி வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். நாம்

கற்ற, பெற்ற இறையனுபவத்தை நமது எதிர்வரும் தலைமுறைக்கு உண்மையுடனும் துணிவுடனும் எடுத்துரைக்க நமக்கு ஆற்றலையும் நம் மக்களுக்கு அருளையும் ஆண்டவர்தாமே அருளவேண்டுமென்று மன்றாடுவோம்.

**பதில் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. இறைவா! உலகமெங்குமுள்ள திரு அவையையும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை மற்றும் திருப்பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து இயேசு வாழ்ந்து காட்டிய மதிப்பீடுகளை துணிவுடனும் உறுதியான நம்பிக்கையுடனும் இறைமக்களுக்கு அறிவித்து வாழ, ஆற்றலை அருள வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவா! எமது நாட்டை ஆளும் அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள், மக்களிடையே செல்வாக்குடையோர் தங்களது சமூகப் பொறுப்பை உணர்ந்து நல்ல, சரியானச் செய்திகளை மக்களிடையே பகிர்ந்து, நாட்டு மக்கள் வாழ்வில் நம்பிக்கையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த, நல்ல ஞானத்தையும் நல்மனதையும் அருள வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவா! இத்தொற்று நோய்க் காலத்தில் வெகுஜன மற்றும் சமூக ஊடகங்களை வழிநடத்தும் நிறுவனங்கள் மற்றும் ஊடகத்துறைப் பணியாளர்கள், தங்களது பொறுப்பை உணர்ந்து உண்மையுடனும் நீதியுடனும் மக்களின் வாழ்வை மேம்படுத்தும் செய்திகளை வழங்கி ஊடக அறநெறியைக் காக்கும் திறனையும் துணிவையும் அருள வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

4. இறைவா! தீய, பொய்யான, நீர்த்துப்போகச் செய்யும், உணர்வுகளைத் தூண்டும் கதைகளை பேஸ்புக் (facebook), வாட்ஸ்அப் (Whats App), ட்விட்டர் (Twitter), இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக இன்றைய காலத்தில் பொய்யான, மாய உலகத்தை முன்னிறுத்தும் நிலைக்கு மாற்றாக, அற்புத ஆற்றல் படைத்த நமது இளைஞர் இயேசுவின் இறையாட்சி மதிப்பீடுகளைச் சொல்லும் கதைகளை, சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்புறைச் செய்து, உண்மையான, நிறைவாழ்வை அளிக்கும் இறையாட்சியை இம்மண்ணில் கட்டியெழுப்ப, நமது இளைஞருக்கு ஞானத்தையும், ஆற்றலையும் தந்து, ஒருங்கிணைத்தருள வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

5. இறைவா! இல்லந்தோறும் இறையாட்சி எனும் நோக்கோடு ஊடக வழியில் இறையாட்சி பணியாற்றி வரும் நமது மாதா தொலைக்காட்சியையும் அதற்காக தங்களை அர்ப்பணித்துள்ள அனைவரையும் ஆசீர்வதித்து இறைமக்கள் வாழ்வில் இறைநம்பிக்கையையும் ஒன்றுபட்ட உள்ளத்தையும் ஏற்படுத்தும் பணியை தொடர்ந்து சிறப்பாக ஆற்ற தேவையான அருளையும் எல்லாவிதமான உதவிகளையும் வழங்கிட வேண்டுமென்று ஆண்டவரே, உம்மை மன்றாடுகிறோம்.

வழிபாட்டுத் தலைவர் : நம்முடைய தனிப்பட்ட தேவைகளுக்காக அமைதியாக வேண்டுவோம் (அமைதி)

வழிபாட்டுத் தலைவர் : மன்றாடுவோமாக : இரக்கம் நிறைந்த இறைவா, உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் உம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு எழுப்பியுள்ள இந்த வேண்டுதல்களுக்கு கனிவுடன் செவிசாய்த்தருளும். எங்களை எந்நாளும் காத்து வழிநடத்தி வருகின்ற எம் தந்தையே, உமது வள்ளன்மையால் நாங்கள் உம் அருள்வரங்களை நிறைவாகப் பெற்று மகிழ்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

வழிபாட்டுத் தலைவர் : இறைவன் நம்மைத் தொடர்ந்து அன்பு செய்து வருகிறார். நமது அன்பை அவருக்குக் காட்டும் அடையாளமாக, நம்மையே இறைவனுக்கு காணிக்கையாக்குவோம்.

பாடல் : (பொருத்தமான காணிக்கைப் பாடல் பாடலாம்).

இதய காணிக்கை இறவாத காணிக்கை
இறை மனித உறவின் சின்னமாம் அன்பின் காணிக்கை (2)
இறையே இதை ஏற்றிடுவாய் உனதாய் எனை மாற்றிடுவாய் (2)

1. மேகங்கள் கூடிடவே வான்மழை அருவியாகுமே
உன் அருளுக்குச் சான்றாகுமே (2)
இறைவா உனைப்போல் வார்த்தையை வாழ்வாக்கி
வழிகாட்டிச் சென்றிட வரம் ஒன்று தா (2) இதய காணிக்கை

2. எண்ணங்கள் உயர்ந்திடவே உள்ளங்கள் கோயிலாகுமே
நல்வாழ்வு அதன் பரிசாகுமே (2)
கருணா உனைப்போல் மாறாத அன்பினால்
அயலாரை நேசிக்கும் நல் உள்ளம் தா (2) இதய காணிக்கை

**காணிக்கைமீது மன்றாட்டு** (அருள்பணியாளர் மட்டும்)

ஆண்டவரே, என்றும் புனிதமான இக்காணிக்கை மீட்பு அளிக்கும் ஆசியை எங்கள்மீது பொழிவதாக. இவ்வாறு அருளடையாள முறையில் நிகழும் இப்பலி உமது ஆற்றலால் நிறைவு பெறுவதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் – ஆமென்.

## போற்றிப் புகழ்தல்

வழிபாட்டுத் தலைவர் : அனைத்தையும் படைத்துப் பராமரித்துப் பாதுகாத்து வரும் தந்தையே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கிறோம்; உமக்கு நன்றி கூறுகிறோம்.

வழிபாட்டுத் தலைவர் : கன்னி மரியாவிடமிருந்து பிறந்து எங்கள் பாவங்களுக்காகச் சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

வழிபாட்டுத் தலைவர் : எம் நடுவில் எழுந்தருளி, எங்களைப் புனிதப்படுத்தி வழிநடத்துகின்ற தூய ஆவியாரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

வழிபாட்டுத் தலைவர் : எங்கள் துன்ப வேளையிலே எங்களோடு இருந்து, துயர் துடைத்து ஆறுதல் அளிக்கின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

வழிபாட்டுத் தலைவர் : நாங்கள் நோயுறும்போது நலம்தரும் நாயகனாக வந்து எங்களைச் சந்தித்து, குணமாக்குகின்ற ஆண்டவரே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

வழிபாட்டுத் தலைவர் : என்றும் எங்களோடு தங்கி, எங்களைப் பலப்படுத்தி, உமது வல்லமையாலும் ஆற்றலாலும் நிரப்பிக் காத்து வருகின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

வழிபாட்டுத் தலைவர் : மூவொரு இறைவா, விண்ணகமும் மண்ணகமும் உம்மைப் பணிந்து வணங்கி உமது வல்ல செயல்களைப் புகழ்கின்றன; நாங்களும் வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து முடிவின்றிப் பறைசாற்றிச் சொல்வதாவது:

எல் : தூயவர், தூயவர். . . . .

## பலியின் நினைவு

வழிபாட்டுத் தலைவர் : நம்முடைய மீட்புக்காகத் தம்மையே கல்வாரியில் பலியாக்கினார் கிறிஸ்து. அப்பலியை நாம் இப்போது நினைவுகூர்வோம். அருளடையாள முறையில் தொடர்ந்து நமக்காகப் பலியாகும் கிறிஸ்துவோடு, நம்மையும், நம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் இணைத்துக் கொள்வோம்.

எல் : எங்களுக்காகப் பலியாகும் அன்பு இயேசுவே / உம்மை ஆராதித்துப் போற்றிப் புகழ்கின்றோம். / அன்று கல்வாரியில் பலியான நீர், / இன்று திருப்பலிக் கொண்டாட்டங்களில், / எங்களுக்காக மீண்டும் மீண்டும் பலியாகின்றீர். / வாழ்வளிக்கும் உணவாக உம்மையே எங்களுக்கு அளிக்கின்றீர். / இன்று உம் பலியை / நாங்கள் அருளடையாள முறையில் கொண்டாட இயலாவிடினும் / உமது கல்வாரிப் பலியை நினைவுகூர்கின்றோம்; / அந்தப் பலியோடு எங்களையே இணைத்துக் கொள்கிறோம். எங்கள் இன்பம், துன்பம், / ஏற்றம், ஏமாற்றம், / சிக்கல்கள், பிரச்சினைகள், / வேலைகள், திட்டங்கள் அனைத்தையும், / எங்கள் வாழ்வு முழுவதையும் / உமக்கு உகந்த பலியாக அர்ப்பணிக்கின்றோம். / எங்கள் எளிய காணிக்கையை ஏற்றுக்கொண்டு / எங்களை ஆசீர்வதியும். / எம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் / நீர் புனிதப்படுத்தியருளும். / நாங்கள் எங்களையே மறுத்து, / தியாக உணர்வோடு உம்மைப் பின்பற்றச் செய்வீராக. / எம் சகோதர சகோதரிகளில் உம்மைக் காணவும், அவர்களை முழு உள்ளத்தோடு ஏற்று அன்பு செய்யவும் / தாராள உள்ளத்தோடு அனைவர்க்கும் பணிபுரியவும் / வரமருள்வீராக. / ஆமென்.

## திருவுணவின் நினைவு

வழிபாட்டுத் தலைவர் : கடவுளை நம் தந்தையென அழைக்க இயேசு நமக்குக் கற்பித்தார். எனவே, நம் தந்தையாகிய இறைவனைப் போற்றவும், இறையாட்சி இவ்வுலகில் வளரவும் இயேசு கற்றுத்தந்த மன்றாட்டைச் சொல்வோம்.

எல் : விண்ணுலகில் இருக்கிற. . . . . (பாடலாம்)

வழிபாட்டுத் தலைவர் : இவ்வழிபாட்டில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும், அன்பிலும் நட்புறவிலும் ஒவ்வொரு நாளும் வளர வேண்டுமென்று இயேசு நம்மை அழைக்கிறார். அவரே நம்மிடையே காணப்படும் பிளவுகளை அகற்றி, நம்மை அன்பின் குடும்பமாக உருவாக்குகிறார். எனவே, நாம் அன்புறவில் நிலைத்து வாழ்வோம் என்பதன் அடையாளமாக, ஒருவருக்கொருவர் அமைதியை அறிவித்துக் கொள்வோம்.

### அமைதியை அறிவித்தல்

எல் : உலகின் பாவங்களைப் போக்கும். . .

## ஆன்ம / ஆசை நற்கருணை மன்றாட்டு

வழிபாட்டுத் தலைவர் : இப்போது, ஆண்டவர் இயேசு நம் உள்ளத்தில் எழுந்தருளிவர, அனைவரும் சேர்ந்து மன்றாடுவோம்.

எல் : "ஆண்டவரே, / நீர் என் இல்லத்தில் எழுந்தருள / நான் தகுதியற்றவன். / ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்" / என்று நூற்றுவர் தலைவர் செபித்ததுபோல, / நாங்களும் இப்போது / உம் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறோம். / இனிய இயேசுவே! / நாங்கள் தகுதியற்றவர் களாய் இருந்தாலும், / எங்கள் தகுதியின்மையைப் பாராமல் / நீர் எங்கள் உள்ளங்களில் எழுந்து வாரும். / உம் அன்பிலும் அருளிலும் நாங்கள் நிலைத்திருக்க / எம்முள் எழுந்துவாரும். / உம் பிள்ளைகளாக, / உயிருள்ள உண்மைச் சாட்சிகளாக, / உமது நற்செய்தியின்படி வாழ்பவர்களாக / எங்களை உருமாற்ற வாரும். / தந்தையின் திருவுளப்படி வாழ்ந்திட / எங்களுக்குத் துணைபுரிந்திட வாரும். / நன்மை செய்வதில் ஆர்வமுள்ளவர்களாய், / தீமைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களாய் வாழவும் / எங்களை வழிநடத்த வாரும். / எல்லா நலன்களாலும் வளங்களாலும் எங்களை நிரப்ப வாரும் / – ஆமென்.

### சிறிது நேரம் அனைவரும் அமைதியாக மன்றாடுதல்

### திருவிருந்துப் பாடல்

இசை ஒன்று இசைக்கின்றேன்
இறைவா எளிய குரல்தனிலே (2)
என் இதய துடிப்புகளோ என் இசையின் குரலுக்குத் தாளங்களே (2)

1. காலத்தின் குரல்தனில் தேவா உன் காலடி ஓசை கேட்கின்றது (2)
ஆதியும் அந்தமும் ஆகினாய் (2)
மழலையின் சிரிப்பில் உன்னெழில் வதனம்
மலர்ந்திடும் மண்ணிலே (2)

2. ஏழையின் வியர்வையில் இறைவா உன்
சிலுவைத் தியாகம் தொடர்கின்றது (2)
சமத்துவம் எம்மில் வாழ்ந்திட (2)
உழைக்கும் கரங்கள் ஒன்றென இணைவது
விடியலின் ஆரம்பம் (2)

## இறுதி மன்றாட்டு

வழிபாட்டுத் தலைவர் : ஆண்டவரே, விண்ணக உணவால் ஊட்டம் பெற்ற நாங்கள் உம்மை வேண்டுகிறோம். அதனால் இந்த அன்பின் உணவு எங்கள் இதயங்களை உறுதிப்படுத்தி எங்கள் சகோதரர் சகோதரிகளில் உமக்குப் பணிபுரிய எங்களைத் தூண்டியெழுப்புவதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடியில் அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

வழிபாட்டுத் தலைவர் : ஓ அன்னை மரியே!

எல் : நீர் எப்போதும் எங்கள் பாதையில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக ஒளிர்கின்றீர். சிலுவை அடியில் நின்று இயேசு பட்ட பாடுகளில் பங்கெடுத்து, உமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தீர். நோயாளிகளின் ஆரோக்கியமே! எங்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம்.

அனைத்துலக மக்களின் மீட்புக்குத் துணை நிற்கும் நீர், எங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து வழங்குவீர் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆகவே, கலிலேயாவின் கானாவில் நடந்ததுபோல இந்த சோதனைக் காலத்திற்குப் பின் நாங்கள் எங்கள் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் மீண்டும் திரும்புவோம் என நம்புகிறோம்.

எங்கள் துன்பங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, துயரங்களைச் சுமந்து கொண்டு, சிலுவை வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு எங்களை வழிநடத்திய இயேசு கூறியபடி, தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கி வாழ்வதற்கு இறையன்பின் தாயே எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

ஓ, இறைவனின் புனித அன்னையே, உமது பாதுகாப்பின்கீழ் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம். மாட்சிக்குரிய புனித கன்னியே, சோதனைக்கு உட்பட்டிருக்கும் எங்கள் விண்ணப்பங்களைப் புறக்கணியாமல் எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களை விடுவித்தருளும்.

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

## வாழ்வு வரலாறு ஆகிறது (அல்லது) (வாழ்வே வரலாறு)

**54ஆம் சமூகத்தொடர்பு நாளுக்கான திருத்தந்தை பிரான்சிசின் செய்தி**

***"நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்;" (வி.ப. 10:2).***

இந்த ஆண்டு சமூகத்தொடர்பு நாளுக்கான செய்தியை கதை சொல்லுதல் என்ற பொருளில் வழங்க விரும்புகிறேன். ஏனெனில் நம் வாழ்வுக்கான தாங்கிகளை இழக்காமலிருக்க நல்ல கதைகளில் பொதிந்துள்ள உண்மைகளை நம்முடையதாக்க வேண்டியது அவசியம். நம் வாழ்வை அழித்துவிடாமல் அதனைக் கட்டியெழுப்பும் கதைகள் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்ல ஆற்றல் அளிக்கும். நமது வாழ்வின் வேர்களை நாம் கண்டுகொள்ள நமக்கு உதவும் கதைகள் நமக்குத் தேவை. இன்று உலகில் நிலவி வரும் பல வெறுப்பொலிகளுக்கும் அருவருப்பான செய்திகளுக்கும் நடுவே நம்மைப்பற்றியும் நம்மைச் சுற்றியுள்ள அழகைப் பற்றியும் பேசும் மனித கதைகள் நமக்குத் தேவை. இன்றைய உலகையும் அதன் நிகழ்வுகளையும் அன்புடன் விவரிக்கும் கதைகள் நமக்குத் தேவை. நாம் ஒவ்வொருவரும் பரந்து விரிந்துள்ள உலகமாகிய திரைச்சீலையின் ஒரு நூலிழை என்பதை வலியுறுத்திக் கூறும் கதைகள் நமக்குத் தேவை. நம் ஒவ்வொருவருக்குமிடையே இணைப்புப் பின்னணிகளை வெளிக்கொணரும் விவரிப்புகள் நமக்குத்தேவை.

### 1. கதைகளை நெய்தல்

மனிதர்கள் கதை சொல்பவர்கள். குழந்தைப் பருவ முதலே உணவுக்கு ஏங்குவதுபோல கதைகளுக்காகவும் ஏங்குகிறோம். கற்பனைக் கதைகள், புதினம், திரைப்படங்கள், பாடல்கள், செய்திகள் போன்றவற்றில் வரும் கதைகள் நாம் அறியாமலேயே நம் வாழ்வின்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. இக்கதைகளில் நாம் சந்திக்கும் கதை மாந்தர்களைக் கொண்டே நாம் நன்மை தீமைகளை அறிய முனைகின்றோம். கதைகள் நம் வாழ்வில் அழியா முத்திரையை பதித்துச் செல்கின்றன. நமது நம்பிக்கைகளையும் நமது

நடத்தையையும் நிர்ணயிக்கின்றன. நாம் யார் என்பதை பிறருக்குத் தெரிவிக்கவும் இக்கதைகள் உதவுகின்றன.

நமது இயலாமைகளை மூடிக்கொள்வதற்கு நாம் உடுத்திக்கொள்வது மட்டும் மனிதரின் தனிச்சிறப்பு அல்ல. நம் வாழ்வைப் பாதுகாக்கும் கதைகளால் நம்மை உடுத்திக்கொள்வதும் நம் சிறப்பாகும். மனிதராகிய நாம் துணிகளை மட்டும் நெய்வதில்லை, கதைகளையும் நெய்கிறோம். இலத்தீன் மொழியில் நெய்தலுக்கான சொல் *texere* என்பது. இது தறியில் துணி நெய்தலை மட்டுமல்ல, பாடம் (text) உரை, சொற்றொடர்கள் போன்ற வற்றையும் குறிக்கும். பல்வேறு காலங்களின் கதைகளுக்கும் ஒரு பொது "தறி" உள்ளது. அதுவே அன்றாட வாழ்வின் "கதை மாந்தர்கள்". இவர்கள் மனதில் ஒரு குறிக்கோளுடன் வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளை மனத்திடனுடன் சந்திக்கின்னறனர். தீமையை எதிர்த்துப் போராடுகின்றனர். இவை அனைத்திலும் ஒருவிதமான அன்பின் ஆற்றல் அவர்களை உந்தித்தள்ளுகிறது. இக்கதைகளில் நாம் மூழ்குவதால் வாழ்வின் சவால்களை மேற்கொள்ளும் வீரமும் ஆற்றலும் பெறுகிறோம்.

மனிதர் அனைவரும் கதை சொல்பவர்கள். ஏனெனில் அவர்கள் எல்லோரும் தொடர்ந்து வளர்ச்சியின் செயல்முறையில் இணைந்துள்ளனர். நாம் ஒவ்வொருவரும் நெய்துகொண்டிருக்கும் அன்றாட வாழ்வாகியத் திரைச்சீலையில் நம்மையே கண்டுகொண்டு வளர்ச்சியடைகிறோம். எனினும் தொடக்கமுதல் எல்லாக் கதைகளும் தீயோனால் சிதைக்கப்பட்டு வருகின்றன என்பதும் வரலாறு.

## 2. எல்லா கதைகளும் நல்ல கதைகள் அல்ல

"இதனை நீ உண்டால்... நீ கடவுளைப்போல் ஆவாய்" (தொடக் 3:4). மனிதரின் வாழ்வின் தொடக்கத்திலேயே வரலாறு என்னும் நூலில் தீயோன் பொய்யான செய்திகளைக் கோர்த்து பாம்பின் வழியாக ஏற்படுத்திய பல சிக்கலான முடிச்சிக்களை இன்னும் நாம் முழுமையாய் அவிழ்க்க முடியவில்லை. "உனக்கு உடைமை மிகுந்து இருந்தால் நீ சாதிப்பாய், நீ பெரியவன் ஆவாய்" போன்ற பல தவறான கதைகளால் பிறரை அடக்கி யாள்வதுடன் அழிவின் பாதையில் அவர்களை நடத்திச்செல்லவும் பல கதைகள் இன்றைய சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றன. "இலாபம் தேடு", "வெற்றி பெறு", அப்போது உனது மகிழ்ச்சி நிறைவடையும், "தேவை என நீ நினைப்பதெல்லாம் நிறைவு செய்", "உன் கண்கள் பார்க்கும் அனைத்தையும் நுகர்ந்துப்பார்த்துவிடு"போன்ற நமது அறிவை மழுங்கடிக்கும் பல கதைகள் இன்று உலகில் வலம் வருகின்றன. இன்று உலகினர் வீண்பேச்சு

புறங்கூறுதல் போன்றவற்றிற்காக எவ்வளவு பேராசைக் கொண்டுள்ளனர் என்பதை இன்னும் நாம் உணராமலேயே உள்ளோம். அவ்வாறே அடக்குமுறை, பொய்மை, வன்முறை, வன்கொடுமை போன்றவற்றை எவ்வளவு ஆர்வத்தோடு நம் சமுதாயம் உட்கொண்டு வருகிறது என்பதை உணர்ந்துள்ளோமா சமூகத் தொடர்புக்கான ஊடகங்களில் நம் கலாச்சாரத்தின் பிணைப்புகளை வலுப்படுத்தி சமூகத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகளுக்கு (கதைகளுக்கு) பதிலாக அழிவுக்கு இட்டுச்செல்லும் ஆத்திரமூட்டும் தீய, பயனற்ற கதைகள் மலிந்து கிடக்கின்றன. இவற்றால் நம்மை ஒரு சமூகமாக இணைக்கும் நூலிழைகள் அறுபட்டு சமூகம் பிளவுபட்டு சிதைந்து போகிறது. இவை உண்மையா என்று தேர்ந்துதெளியாதத் தகவல்களைக் கொண்டு நெய்யப்படும் கதைகளும், பயனற்றவற்றைத் திரும்பத் திரும்பக் கூறும் கதைகளும், எதாவது ஒரு விதத்தில் மனிதர்களை நம்பவைக்க முயற்சிக்கும் கதைகளும், கடுமையான வெறுப்பைத் தோற்றுவிக்கும் கதைகளும், ஊடக நிகழ்ச்சிகளும் இன்று எங்கும் மலிந்து கிடக்கின்றன. இவையனைத்தும் மனித வரலாறு அழகிய கோர்வையாக நெய்யப்படுவதற்கு பதில், மனித இனத்தையும் அதன் மாண்பையும் வரலாற்றையும் சிதைத்துச் சீரழிக்கின்றன என்பதை நாம் உணர்ந்துள்ளோமா?

எனினும் அடக்குமுறைகளுக்கு இட்டுச்செல்லும் இத்தகைய கதைகள் நீண்ட நாட்கள் நிலைப்பதில்லை. மாறாக ஒரு நல்ல கதை கால, இட எல்லைகளைக் கடந்து நிலைத்து நிற்பவை. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் வாழ்வுக்கு உணவூட்டுபவையாகத் திகழ்கின்றன.

பொய்மைப்படுத்துதல், வளர்ந்துவரும் அதிநவீனப்படுத்துதல், அதிவேகமாக உச்சத்தை நெருங்கும் கதைகளை ஊடகங்கள் மிகுதியாய்க் கொண்டிருக்கும் இவ்வேளையில், உண்மையையும் அழகையும் எடுத்துக்கூறும் நல்ல கதைகளை நாம் வரவேற்கவும் உருவாக்கவும்வேண்டும். நல்ல கதைகளை ஏற்றுக்கொள்ளவும் பொய்யான கதைகளை ஒதுக்கித்தள்ளவும் நமக்கு தைரியம் வேண்டும். வாழ்வின் சிக்கல்களுக்கு மத்தியில் நம்மை ஒன்றிணைக்கும் நூலிழைகளை அறுத்துவிடாமல் இருக்கும் நல்ல கதைகளைத் தேர்ந்துத் தெளிய பொறுமை வேண்டும். நாம் யார் என்பதையும் அன்றாட வாழ்வில் காணப்படும் வீர கதைமாந்தர்களை நமக்குக் காட்டும் கதைகள் வேண்டும்.

## 3. கதைகளின் கதை - திருநூல்

திருநூல் எனப்படும் விவிலியம் கதைகளின் கதை எனப்படுகிறது. அதன் பக்கங்களில் எத்தனை கதைமாந்தர்கள்! எத்தனை மனித சமூகங்கள்!

எத்தனை நிகழ்வுகள்! அனைத்தும் நம்முன் நிறுத்தப்படுகின்றன. திருநூல் நம் கடவுளைத் தொடக்கத்திலிருந்து படைப்பவராகவும் விரித்துரைப்பவராகவும் காட்டுகிறது. உண்மையில் கடவுள் பேசுகிறார் அதனால் படைப்புப் பொருட்கள் தோன்றுகின்றன (தொநூ 1). விரித்துரைப்பவர் என்ற நிலையில் கடவுள் அழைக்கிறார். பொருட்கள் உண்டாகுகின்றன. பொருட்கள், உலகம் இவற்றின் சிகரமாகிய மனிதரும் இவ்வாறே படைக்கப்பட்டனர். கடவுள் மனிதனைத் தனது உரையாடலின் கூட்டாளியாக இருக்க அழைக்கிறார். கடவுளோடு சேர்ந்து மனிதரும் வரலாற்றைப் படைக்கின்றனர். திருப்பாடல் 139–ல் படைப்புப் பொருள் படைத்தவரைப் பார்த்து "என் உள்உறுப்புக்களை உண்டாக்கியவர் நீரே! என் தாயின் கருவில் எனக்கு உரு தந்தவர் நீரே!... என் எலும்புகள் உமக்கு மறைவானவையல்ல. மறைவான முறையில் நான் உருவானதையும் பூவுலகின் ஆழ் பகுதிகளில் நான் உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்" (தி.பா. 139:13–15). பிறக்கும்போதே முழுமையானவர்களாகப் பிறந்தவர்கள் நம்மில் யாருமில்லை. தாய் வயிற்றிலும் பின்னர் உலகிலும் தொடர்ந்து நெய்யப்பட்டு பலவற்றைக் கொண்டு பின்னப்பட்டு முழுமனிதர் ஆகிறோம். மிகவும் வியப்புக்குரிய மறைபொருளாகிய நம்வாழ்வு நாம் அதனைத் தொடர்ந்து நெய்துகொண்டே இருக்க வேண்டுமென்றே நமக்குத் தரப்பட்டுள்ளது.

விவிலியம் கடவுளுக்கும் மனிதருக்குமிடையே ஆன அன்புக் கதையாகும். அக்கதையின் மையத்தில் இருப்பவர் இயேசு கிறிஸ்து. கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பையும் நாம் கடவுள்மீது கொண்டுள்ள அன்பையும் நிறைவுக்குக் கொண்டுவருபவர் அவரே. எனவே ஒவ்வொரு தலைமுறையின் ஆண்களும் பெண்களும் கதைகளின் கதையாகிய விவிலியத்தின் மையப்பொருளை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை நினைவு கூறவும் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கவும் அழைக்கப்படுகின்றனர்.

இந்த ஆண்டின் சமூகத்தொடர்பு நாள் செய்தியின் தலைப்பு கடவுள் மக்களின் விடுதலை வரலாற்றில் குறுக்கிட்டுச் செயல்பட்ட நிகழ்வுகளைக் கொண்டுள்ள விடுதலைப் பயண நூலிலிருந்து எடுக்கப்பட்டது. எகிப்து நாட்டில் அடிமைகளாய் இருந்த இஸ்ரயேலர் கடவுளை நோக்கி கூவி அழைத்தபோது "அவர்களது புலம்பலைக் கடவுள் கேட்டார். ஆபிரகாமுடனும் ஈசாக்குடனும் யாக்கோபுடனும் தாம் செய்திருந்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். கடவுள் இஸ்ரயேல் மக்களைக் கண்ணோக்கினார். அவர்களது நிலைமைகளையும் கடவுள் அறிந்துகொண்டார்" (வி.ப. 2:24–25). கடவுளின் நினைவுகூர்தல் பல அருஞ்செயல்களுக்குப் பிறகு அவர்களுக்கு

அடிமைத்தளையிலிருந்து விடுதலையைக் கொண்டுவந்தது. பின்னர் இவ்வருஞ்செயல்களின் பொருளை கடவுள் மோசேவுக்கு வெளிப்படுத்தினார். ‘‘நான் அவனது மனதைக் கடினப்படுத்தியன் நோக்கம் என் அருஞ்செயல்களை அவன் முன்னிலையில் நிலைநாட்டுவதும் எகிப்துக்கு எதிராக போராடி அவர்களிடையே நான் செய்த அருஞ்செயல்களைப்பற்றி நீ உன் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் விவரித்துச் சொல்வதுமே’’ (வி.ப. 10:2). இந்த விடுதலை அனுபவத்தின் கதையைக் கூறுவதன் மூலம் ஆண்டவரைப்பற்றிய அறிவும் அவர் தம் மக்களிடையே எவ்வாறு பிரசன்னமாயிருந்து விடுதலை அளிக்கிறார் என்ற செய்தியும் தலைமுறை தலைமுறையாய் வழங்கப்படுகிறது. வாழ்வின் கடவுள் கதைகள் வழியாக நம்முடன் உரையாடி தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

இயேசு கடவுளைப்பற்றி கருத்தளவில் மட்டும் பேசவில்லை. மாறாக அன்றாட வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட உவமைகள், கதைகள், உதாரணங்கள், பழமொழிகள், விவரிப்புகள் மூலமாகப் பேசினார். இவ்வாறு சொல்பவருக்கு வாழ்வே கதையாகிறது. கேட்பவருக்கு கதையே வாழ்வாகிறது. கதைகள் அவர்களை மாற்றுகின்றன.

இயேசுவின் நற்செய்தியும் கதைகளால் ஆனது எனலாம். இது இவ்வாறு தற்செயலாக அமைந்துவிடவில்லை. இக்கதைகள் இயேசுவைப் பற்றிய செய்திகளை எடுத்துக்கூறுகின்றன. அதேவேளையில் அவை செயல்திறம் கொண்டவை. திருத்தந்தை பெனடிக்ட் ‘‘மீட்பளிக்கும் எதிர்நோக்கு’’ என்ற தன் மடலில் ‘‘கிறிஸ்தவ நற்செய்தி தகவல் அளிப்பவை மட்டுமல்ல மாறாக அவை செயலாக்குபவை (வாழ்வை மாற்றுபவை)’’ எனக் குறிப்பிடுகிறார். இக்கதைகள் நம்மை இயேசுவோடு ஒன்றிக்கச் செய்கின்றன. நற்செய்தி அதனைக் கேட்போரிடம் கிறிஸ்துவுடன் வாழ்வைப் பகிர்ந்து கொள்ளவும் அவரது நற்செய்தியை ஏற்றுக்கொள்ளும்படியும் கோருகிறது. ‘‘மிகச்சிறந்த கதை சொல்லும் வார்த்தையானவரே கதையாகிறார்’’என யோவான் நற்செய்தி கூறுகிறது. ‘‘தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமான வரும் கடவுள்தன்மைக் கொண்டவருமாகிய ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்’’ (யோவா 1:18). வெளிப்படுத்துதல் என்பதைக் குறிக்கும் மூல கிரேக்கச் சொல்லான ‘‘எக்சேஜேசாதோ’’ என்பதனை வெளிப்படுத்துதல் என்றும் விவரித்துக்கூறுதல் என்றும் மொழிபெயர்க்கலாம். கடவுள் மனிதரோடு தம்மையே நெய்துகொண்டார். அதனால் புதிய விதத்தில் கதைகள் புனைய வழிவகுத்தார்.

## 4. எப்போதும் புதிய கதை - புதுப்பிக்கும் கதை

கிறிஸ்துவின் வரலாறு ஒரு பழங்காலக் கதையல்ல. அது இப்போதும் எப்போதும் நமது கதை. கடவுள் நம் வாழ்விலும் வரலாற்றிலும் பங்கு பெறும்பெருட்டு தன் ஒரே மகனை நம்மிடையே அனுப்பியதால் அவர் நம்மீதும், நம் உடல், நம் வாழ்வு, ஏன் நம் வரலாற்றின் மீதும் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தும் கதை. இதனால் மனிதராகிய நமது கதை முக்கிய மில்லாததும் அற்பமானதும் அல்ல என்பதைக் குறித்துக்காட்டுகிறது. கடவுளே நம்முடன் இணைந்து கதையானதால் ஒவ்வொரு மனித கதையும் ஒரு தெய்வீகக் கதையாகிறது. ஒவ்வொரு மனிதனின் கதையிலும் கடவுள் உலகிற்கு வந்த தன் மகனின் கதையை மீண்டும் காண்கிறார். எனவே, ஒவ்வொரு மனித கதையிலும் மறைத்துவைக்க முடியாத மாண்பு பொதிந்துள்ளது. இதனால் மனுக்குலத்திற்கு இயேசு எந்த அளவுக்கு அதன் மாண்பைப் போற்றி உயர்த்தினாரோ அதை நிலைநாட்டக் கூடிய தகுதி வாய்ந்த கதைகள் தேவை. புனித பவுல் பின்வருமாறு எழுதுகிறார் “எங்கள் பணியின் வாயிலாக கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. அது மையினால் எழுதப்பட்டதல்ல. மாறாக வாழும் கடவுளின் ஆவியால் எழுதப்பட்டது. கற்பலகையில் அல்ல. மாறாக மனித இதயமாகிய பலகையில் எழுதப்பட்டது” (2 கொரி 3:3). கடவுளின் அன்பாகிய தூய ஆவியார் நம்முள் எழுதுகிறார். அவ்வாறு எழுதும்போது நம்மில் நன்மைத்தனத்தை உண்டாக்குகிறார். அதையே தொடர்ந்து நமக்கு நினைவூட்டுகின்றார். நினைவூட்டுதல் என்பது நம் இதயத்தில் எழுதுவதாகும். தூய ஆவியின் ஆற்றலால் நம் எல்லா மனித கதைகளும் மறக்கப்பட்ட கதைகளும் உருக்குலைந்த கதைகளும் கூட எழுச்சியூட்டும் கதைகளாக மாறுகின்றன. அவையே மிகச்சிறந்தப் படைப்பாகவும் நற்செய்திக்குப் பின்னணியாகவும் மாறுகின்றன. இவ்வாறு உருவானவையே புனித அகுஸ்தீனாரின் “கன்பெசன்ஸ்” என்ற நூலும் புனித இஞ்ஞாசியாரின் “திருப்பயணியின் பயணம்” என்ற கதையும் புனித குழந்தை தெரேசாவின் “ஓர் ஆன்மாவின் கதை” என்ற நூலும் “மணஒப்பந்தமானவர்” மற்றும் “காராமாசோல் சகோதரர்கள்” போன்றவையும் ஆகும். இது போன்ற எண்ணற்ற நூல்கள் (கதைகள்) கடவுளின் சுதந்திரத்திற்கும் மனிதனின் சுதந்திரத்திற்கும் இடையே நிகழும் சந்திப்பை அழகாக விளக்குகின்றன. நற்செய்தியின் மணத்தைத் தன்னுள்கொண்டுள்ள பல விதமான கதைகள் வாழ்வை மாற்றும் ஆற்றல் உள்ள அன்புக்குச் சான்றுபகர்கின்றன. இத்தகைய கதைகள் எல்லா இடங்களிலும், எல்லா மொழிகளிலும், பிறருடன் பகிர்ந்துக்கொள்ளப்பட வேண்டியது, சொல்லப்பட வேண்டியது மிக அவசியம்.

## 5. நம்மைப் புதுப்பிக்கும் கதை

நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்தின் ஒரு பகுதியே என்பதால் நம் தனிப்பட்ட மனிதக் கதை உலகப் பெருங்கதையின் ஒரு பகுதியாகிறது. திருநூல், புனிதர்களின் வாழ்க்கைக் கதைகள், மனித மனங்களுக்கு ஒளியூட்டிய நூல்கள் போன்றவற்றை வாசிக்கும்போது தூய ஆவியார், நம் இதயங்கள் அவற்றின் அழகையும் கடவுளின் பார்வையில் நமக்குள்ள மாண்பையும் உணரச்செய்கிறார். நமது படைப்பிலும் மீட்பிலும் கடவுள் நம்மீது செலுத்திய அன்பை நினைவுகூறும்போது, நாம் அன்பை நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக்குகிறோம். நம் வாழ்வு என்ற திரைச்சீலையை இரக்கம் என்ற நூலால் நெய்யும்போது வாழ்வின் மறுப்பக்கத்திற்குக் கடந்து செல்கிறோம். வருத்தம், சோகம், கசப்பான இதயத்தை கனமாக்கும் நினைவுகள் போன்றவற்றிலிருந்து நாம் விடுபட்டு சிறந்த கதைச் சொல்பவராகிய கடவுளின் மனநிலையை நாமும் பெறுகிறோம். நமது கதையை நாம் சொல்வது வீணானதன்று. செய்யப்பட்ட பதிவுகள், எழுத்துக்கள், சாதாரணமானதாகவே இருந்தாலும் அவற்றின் உட்பொருளும் அது குறித்துக்காட்டும் உண்மைகளும் நமது வாழ்வுக்கு புதிய ஆர்வத்தைக் கொடுக்கின்றன. நம் கதையை கடவுளிடம் கூறுவதால் நாம் அவரது அருளிரக்கமுள்ள பார்வையில் நுழைகிறோம். அப்போது நம் வாழ்க்கைக் கதையின் மனிதர்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் அனைத்தையும் அவர்முன் வைக்கிறோம். இதனால் கடவுளோடு இணைந்து நம் வாழ்க்கைக் கதைகளைப் புனைகிறோம். அதில் உள்ள கிழிசல்களைத் தைக்கிறோம். அங்குள்ள சோகங்களையும் கண்ணீரையும் துடைத்து வாழ்வை புதுப்பித்துக் கொள்கிறோம். இத்தகைய கதை சொல்லுதல் நம் அனைவருக்கும் மிகவும் அவசியம்.

வாழ்வின் இலக்கைச் சரியாகப் புரிந்துள்ள சிறந்த கதை சொல்பவராகிய கடவுளின் பார்வையில் நம் வாழ்வுக் கதையின் கதைமாந்தர், நம் கதையில் இன்று நம்மோடு இணைந்து செயல்படும் நமது சகோதர சகோதரிகளுடன் நாம் தொடர்பு கொள்கிறோம். இந்த உலகம் என்னும் மேடையில் யாருமே தேவையற்றவர்கள் கிடையாது. எல்லாருடைய கதைகளுமே மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல் கொண்டவை. தீமையைப்பற்றி கதைகளில் குறிப்பிடப்படும்போது அவை மீட்கப்பட வேண்டியவற்றைக் குறித்துக்காட்டும் அறிகுறியாகவும் தீமைகளுக்கு இடையேயும் நன்மையைக் கண்டு கொள்ளவும் இது வாய்ப்பளிக்கும்.

நமது கதையைச் சொல்லுதல் என்பது தன்னையே விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக அல்ல. மாறாக, கடவுள் பார்வையில் நாம் யார் என்பதையும், தூய ஆவியார் நம் கதையில் என்ன எழுதுகின்றார் என்பதை எடுத்துரைக்கவும் ஒவ்வொருவரின் கதையிலும் மறைந்திருக்கும் அற்புதமான செயல்பாடுகளை வெளிக்கொணரவும் நாம் நம் கதைகளைச் சொல்ல வேண்டும். இதனைச் செய்ய தம் கருவிலே இறைமையை நெய்து உருக்கொடுத்தவரும் நற்செய்திகளில் நாம் காண்பதுபோன்று பல நிகழ்வுகளை இணைத்து தமது வாழ்வை நெய்தவருமாகிய ஒரு பெண்ணிடம் நம்மை ஒப்படைப்போம். ஏனெனில் கன்னி மரியா "இந்நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக்கொண்டிருந்தார்" (லூக் 2:19). இந்த அன்னை மரியாவிடம் நம் வாழ்வில் ஏற்படும் முடிச்சுக்களைத் தம் அன்பினால் அவிழ்த்துவிடும்படி வேண்டுவோம்.

பெண்ணும் அன்னையுமாகிய ஓ மரியே!

இறைவார்த்தையை உம் கருவில் நெய்தீர்.

கடவுளின் மாபெரும் செயல்களை உம் வாழ்வினால் விரித்துரைத்தீர்.

எங்கள் கதைகளுக்குச் செவிசாய்த்து அவற்றை உம் இதயத்தில் இருத்தியருளும்.

யாரும் கேட்க விரும்பாத எங்கள் கதைகளையும் உமதாக்கிக் கொள்ளும்.

எங்கள் வரலாற்றில் இழையோடும் நல்ல நூலிழைகளை

நாங்கள் கண்டுணரச் செய்தருளும்.

எங்கள் வாழ்வை முடக்கிப்போடும் முடிச்சுக்களைக் கண்ணோக்கி

உமது மென்மையான கரங்களால் எல்லா முடிச்சுக்களையும் அவிழ்த்துவிடும்.

ஆவியாரால் நிரப்பப்பட்ட அன்னையே!

நம்பிக்கையின் தாயே!

எங்களை ஊக்குவித்தருளும்.

அமைதியின் கதைகளை, எங்கள் எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் கதைகளை

நாங்கள் உருவாக்க எங்களுக்கு உதவியருளும்.

இக்கதைகளை வாழ்ந்து காட்ட வழிகாட்டும்.

**உரோமை, புனித இலாத்தரன் பெருங்கோவில், 24.01.2020. புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் நினைவு நாள்.**

## (இறுதி ஆசீருக்குமுன்)

### தீர்மானங்கள்

**(இடது கரத்தை நெஞ்சில் வைத்து வலது கரத்தை உயர்த்திச் சொல்வோம்).**

- பேஸ்புக் (Facebook), வாட்ஸ்அப் (WhastsApp), ட்டுவிட்டார் (Twitter), இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற சமூக ஊடகங்களை பயன்படுத்தும்போது பொறுப்புணர்வோடும் சுயக்கட்டுப்பாடுடனும் நடப்பேன்.
- இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் என்னை ஆட்டிப்படைக்க இடம் தரமாட்டேன்.
- மனித மாண்பு மற்றும் பண்பாடுகளுக்கு எதிராக பரப்பப்படும் பொய்யான கதைகளை பிறருக்கு அனுப்பமாட்டேன். (அல்லது) forword செய்யமாட்டேன்.
- ஊடக அறநெறியை அறிந்து செயல்படுவேன்; அதனைக் காப்பேன்.
- இணையம் மற்றும் சமூக ஊடகங்களைக் காட்டிலும் இறைவனையும், இயற்கையையும், பிறரையும் மதித்து நேசிப்பேன்.
- இறையாட்சியின் மதிப்பீடுகளை முன்னிறுத்தும் கதைகளை பிறருக்கு வழங்கிட உழைப்பேன்.
- அலைபேசி மற்றும் மற்ற ஊடகப் பயன்பாட்டை வீடுகளில் தவிர்த்து குடும்ப உறவுகளுக்கு அதிகமான நேரத்தைச் செலவிடுவேன்.
- ஊடக வழியில் இறையாட்சி பணியாற்றும் நமது மாதா தொலைக் காட்சிக்கு ஆதரவு தருவேன், அதனைத் தாங்கிப் பிடிப்பேன்.

## உறுதியேற்பு மன்றாட்டு

**(முதல்வர் சொல்ல வீட்டில் அனைவரும் திரும்பச் சொல்லவும்)**

அறநெறியைக் கற்பித்து / வாழ்ந்து காட்டியவரே இறைவா! / அறிவுறுத்துதல், பயிற்றுவித்தல் / மற்றும் பொழுதுபோக்குதல் என்னும் / மூன்று அடிப்படையான நோக்கங்களுடன் / வாழ்வை வளப்படுத்தும் / அமைதி, உண்மை / மற்றும் நம்பிக்கைக் கதைகளை ஊக்கப்படுத்த / உருவாக்கப்பட்ட ஊடகங்களை வைத்து / சுயலாபம் தேடி / அடுத்தவரை அடிமைப்படுத்தாமல் / நீர் எங்களுக்குக் கொடையாகத் தந்துள்ள / ஊடகங்கள் வழியாக / அன்பு, நீதி, உண்மை எனும் / வாழ்வியல் மதிப்பீடுகளை / சமூகத்தில் விதைத்து / நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் / எதிர்கால தலைமுறைக்கு

விட்டுச்செல்ல வழிநடத்த வேண்டுமென்று, / எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். – ஆமென்.

## ஊடகப் பணிகளுக்காக அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

**(திருத்தந்தை பிரான்சிஸ்)**

பெண்ணும் அன்னையுமாகிய ஓ மரியே!
இறைவார்த்தையை உம் கருவில் நெய்தீர்.
கடவுளின் மாபெரும் செயல்களை உம் வாழ்வினால் விரித்துரைத்தீர்.
எங்கள் கதைகளுக்குச் செவிசாய்த்து அவற்றை உம் இதயத்தில் இருத்தியருளும்.
யாரும் கேட்க விரும்பாத எங்கள் கதைகளையும் உமதாக்கிக் கொள்ளும்.
எங்கள் வரலாற்றில் இழையோடும் நல்ல நூலிழைகளை
நாங்கள் கண்டுணரச் செய்தருளும்.
எங்கள் வாழ்வை முடக்கிப்போடும் முடிச்சுக்களைக் கண்ணோக்கி
உமது மென்மையான கரங்களால் எல்லா முடிச்சுக்களையும் அவிழ்த்துவிடும்.
ஆவியாரால் நிரப்பப்பட்ட அன்னையே! நம்பிக்கையின் தாயே!
எங்களை ஊக்குவித்தருளும்.
அமைதியின் கதைகளை, எங்கள் எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் கதைகளை
நாங்கள் உருவாக்க எங்களுக்கு உதவியருளும்.
இக்கதைகளை வாழ்ந்து காட்ட வழிகாட்டும். – ஆமென்.

## ஆசியுரை

வழிபாட்டுத் தலைவர் : நன்மையே உருவான இறைவன் நமக்குத் தம் அருளை அளித்து, ஆசீரைப் பொழிந்து, எல்லாத் தீமைகளினின்றும் நம்மைக் காத்தருள்வாராக.

எல் : ஆமென்.

வழிபாட்டுத் தலைவர் : நம் புகலிடமாகிய இறைவன் நம் நம்பிக்கையை வளர்த்து, எதிர்நோக்கை உறுதிப்படுத்தி, நாம் இறுதிவரை அன்பிலும் அமைதியிலும் நிலைத்திருக்கச் செய்வாராக.

எல் : ஆமென்.

வழிபாட்டுத் தலைவர் : கருணை மிகுந்த கடவுள் நம்மை இரக்கத்துடன் கண்ணோக்கி, நம் திட்டங்களும் முயற்சிகளும் விருப்பங்களும் நிறைவேறச் செய்வாராக.

எல் : ஆமென்.

வழிபாட்டுத் தலைவர் : ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

வழிபாட்டுத் தலைவர் : இறையன்பிலும் பிறரன்பிலும் வாழ்ந்து சான்றுபகரச் சென்று வருவோம்.

எல் : இறைவா உமக்கு நன்றி!

## நிறைவுப் பாடல்

இனிய உன் நாமம் ஓதிடல் தினமே
அனைவரும் மகிழ்வோமே
தாயினும் மேலாம் தாயுமே நீயே தமியோர் திரவியமே (2)
அன்பிதே அன்பிதே மாதா தன்னலமேயற்ற மாதா (2)

1. கலைமொழியால் உனைத் துதித்திடல் நாளும்
   கவலையே தீருமம்மா (2)
   தேனிசைப் பாவால் தாயுனைப் பாட தெவிட்டா உணவாமே (2)
   அன்பிதே அன்பிதே மாதா தன்னலமேயற்ற மாதா (2)

2. பஞ்சமும் நோயும் பகையும் தீர பரிவுடன் காருமம்மா (2)
   வளமோடு வாழ்வும் நலமுடன் வாழ
   வரமொன்று தாருமம்மா (2)
   அன்பிதே அன்பிதே மாதா தன்னலமேயற்ற மாதா (2)